பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 06 2025 **THURSDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்சு சுக்லா உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் அடியெடுத்து வைத்தனர்.

2. எல்லைதாண்டிய தீவிரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு பிரதிபலிக்கப்படாததால், ஷாங்காய் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது.

3. தமிழகத்தில் திமுக அரசின் செயலற்ற திறனால் மா விவசாயிகள் உரிய விலை கிடைக்காமல் இன்னலுக்கு ஆளாகியிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேற்றப்பாதையில் செல்வதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் இரட்டையர் பிரிவுகளில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

>>>>><<<<<

இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்சு சுக்லா உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் அடியெடுத்து வைத்தனர்.

விண்வெளி வீரர்கள் தங்களது வெற்றியை கொண்டாடும் வகையில், குளிர்பானம் அருந்தினர்.

முன்னதாக அவர்கள் பயணித்த டிராகன் விண்கலம் வெற்றிகரமாக முறையில் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டது.

ஆக்ஸியம் 4 திட்டத்தின் கீழ், டிராகன் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலிருந்து ஃபால்கன் ராக்கெட் மூலம் அவர்கள் சென்றனர்.

குறிப்பிட்ட நேரத்தில் டிராகன் விண்கலம் மூலம் இந்த நான்கு விண்வெளி வீரர்களும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை அடைந்துள்ளனர்.

இவர்கள் 14 நாட்கள் சர்வதேச அங்கு தங்கி, 60க்கும் மேற்பட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்திய வீரர் திரு. சுபான்சு சுக்லா நுண்ணுயிர் கிருமிகள் குறித்தும் விண்வெளியில் உயிரி தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

எல்லைதாண்டிய தீவிரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு பிரதிபலிக்கப்படாததால், ஷாங்காய் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது.

சீனாவில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வரும் ஷாங்காய் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தீவிரவாதம் பிரிவினைவாதம் உள்ளிட்டவற்றிற்கு எதிராக உலக நாடுகள் ஒருங்கிணைந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அமைதியும், வளர்ச்சியும் தீவிரவாதத்தோடு இணைந்து செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பஹல்காமில் தீவிரவாத நடவடிக்கைகளால் நேபாளத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் ஈவு இரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

லஷ்கர் இ தொய்பாவின் துணை அமைப்பான **The Resistant Front** இந்த கொடூர செயலில் ஈடுபட்டதையும் அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஷாங்காய் நாடுகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தீவிரவாதம் தொடர்பாக இரட்டை நிலைப்பாட்டை கடைபிடிக்கும் நாடுகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஷாங்கய் ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பில் இணைந்துள்ள பெலாரஸை வரவேற்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் திமுக அரசின் செயலற்ற திறனால் மா விவசாயிகள் உரிய விலை கிடைக்காமல் இன்னலுக்கு ஆளாகியிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பான தமது செய்தியை சமூகவலைதளப் பதிவில் பகிர்ந்துள்ள அவர், மா சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இந்தப் பிரச்சினையை மத்திய அரசிடம் தள்ளிவிட்டு தப்பிவிடலாம் என முதலமைச்சர் எண்ணுவதாகவும் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

**>>>>><<<<<**

பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேற்றப்பாதையில் செல்வதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் 517 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பணிகள் மற்றும் முடிவுற்ற திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் சராசரி வளர்ச்சியை விட தமிழகத்தில் தனிநபர் வளர்ச்சி அதிகமாக உள்ளது என்றும் அவர் கூறினார். ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் 9 புள்ளி இரண்டு ஒன்று சதவீதமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். கிராமப்புறங்கள் நகரங்களுக்கு இணையாக வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்பதில் மாநில அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

திருப்பத்தூரை அடுத்த மல்லகுண்டா பகுதியில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் சிப்காட் தொழிற்பேட்டை தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

குமாரமங்கலத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பில் துணை மின்நிலையம், ஆலங்காயம் நெக்னாமலையில் 7 கிலோமீட்டர் தூர மலைவழிச்சாலை, திருப்பத்தூரில் அடுக்குமாடி வணிகவளாகம், ஆம்பூரில் புதிய நூலகம் ஆகிய ஐந்து திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பையும் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

>>>>><<<<<

வடமேற்கு வங்கக் கடலை ஒட்டிய ஒடிசா கடற்பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மேற்குதிசை காற்று வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரியில் போதைப்பொருள் ஒழிப்பு தின ஓட்டத்தினை மாநில அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை ஒட்டி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தலைமையில் அனைத்து துறை அதிகாரிகள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு தின பேரணி நடைபெற்றது.

>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி அருகேயுள்ள தாமரைப்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் போக்ஸோ சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>>><<<<<

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் சார்பில் கள ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

நாகை மாவட்ட மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி, அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் மீன்பிடி சாதனங்களையும் பறித்துச் சென்றனர்.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம், வடக்குவாசல் பகுதியில் 15 டன் போலி உர மூட்டைகளை வேளாண் துறை அலுவலர்கள் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் இரட்டையர் பிரிவுகளில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அபெய் சிங் - வேலவன் செந்தில்குமார் இணை 9-11, 11-5, 11-5 என்ற செட்கணக்கில் பாகிஸ்தானின் **Zaman – Iqbal** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - ஜோஷ்னா சின்னப்பா இணை 8-11, 11-9, 12-10 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Yee Xin - Ama** இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - அபெய் சிங் 11-9, 11-7 என்ற செட்கணக்கில் மலேசிய இணையை வென்றது.

>>>>><<<<<

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – அங்கிதா ரெய்னா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-4, 10-7 என்ற செட்கணக்கில் பெலாரஸின் **Yulia Hatouka -** போலந்தின் **Martyna Kubka** இணையை வென்றது.

>>>>><<<<<

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-19, 21-9 என்ற செட்கணக்கில் வியட்நாமின் **Thuy Linh Nguyen**-ஐ வென்றார்.

இப்போட்டியில், **Ira sharma-**வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>end<<<<<**